# விளக்கு

இதழ் 06 ஓகஸ்ட் 2002



உங்களுக்கும்தான்..

20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நீ பேசிக்கொண்டிருக்கும் ஒரு வார்த்தையோடு கூட எனக்கு உடன்பாடில்லை. இருந்தாலும் அதைச் சொல்ல உனக்குள்ள உரிமையைக் காக்க நான் சாகவும் சம்மதம்.
> - வோல்ட்டேயர் -

**ஆசிரியர்கள்**
த.வேலவன்
மு.மயூரன்

**தொடர்புகளுக்கு**
ஆசிரியர்,
"விளக்கு"
157,கடற்படைத்தளவீதி,
திருக்கோணமலை.

026-20309

**கட்டுரை**
ஜபார்
கா.சிவபாலன்
க.தேவகடாட்சம்
சந்த்ரராம்
ஆ.சுதாகரன்

**கவிதை**
கௌசி
சு.வில்வரத்தினம்

**கடிதம்**
தோழன்
தோழி

**நூல் அறிமுகம்**
ஏ.யதீந்திரா

**அட்டைப் புகைப்படம்**
ஜபி

வணக்கம்,

முற்றுப் புள்ளிகள்
முணுமுணுக்கிறது என்பதற்காகத்
தகர்ந்து போகாமல் இருப்பதில்லை
நிரந்தரங்கள்.
~ஜபார் (தரப்பட்டுள்ள அவகாசம்)~

'விளக்கு' என்ற பெயரில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாதஇதழ் முன்பு வெளிவந்திருப்பதாக அண்மையில் அறியக் கிடைத்தது. மீண்டும் அவ்விதழ் வெளிவருவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் எமக்கு தகவல் கிடைத்தது.' பதிவு செய்யப்பட்டதோ இல்லையோ,ஏற்கனவே வெளிவந்த ஒரு சஞ்சிகையின் பெயரை தெரிந்தும் வைத்துக்கொண்டிருப்பதை நாகரிகமான செயலாக நாம் கருதவில்லை.

'முற்சேர்க்கை, பிற்சேர்க்கை ஏதாவது வைத்துக் கொள்ளலாமே' என்ற ஆலோசனைகளும் எமக்கு வழங்கப்பட்டன.
தகர்ந்து போகும் நிரந்தரங்களை விட்டு விட்டு வளர்ந்து வரும் புது யுகத்தினை நோக்கிய பெயர்வினை நாடிநிற்கும்
எமக்கும் எம் சஞ்சிகைக்கும் பெயர் மாற்றம் ஒன்றும் மனவருத்தம் தரும் விடயமல்ல.

பெயர்வினையே பெயராக்கிக் கொள்வதில் மகிழ்ச்சியும் கூட.

ஏற்கனவே தோன்றி வளர்ந்து நிரந்தரித்துப் போயிருக்கும் எதுவும் நம்பத்தகாதது.
அழிய ஆரம்பித்து விட்டது. அது
வெல்லமுடியாததாக தோன்றலாம். ஆனால் புதிதாக தோன்றி
வளர்ந்து வருகிறதே வளர்ச்சி விதியின் அடுத்த கட்டம்,
அது எதையும் தகர்த்து வெல்லும். அது இயல்பு. இதில் நாம் எந்தப் பக்கம்?

நடுநிலை என்பது பொய்!

வளர்ச்சி என்பது பெயர்ச்சிதான். பின்னுக்கு இழுப்பதோ, பிடுங்க முனைவதோ வளர்ச்சியாகாது.

சமூகம் தானாக வளரும் போது, இயல்பாக பெயரும் போது அதனோடு இணைந்து வளர்க, அதன்வழி பெயர்க,

அதற்கு அப்பாலும்.............

தோழமையுடன்,
ஆசிரியர்கள்.

சகல ஆக்கங்களுக்கும் ஆக்கியோரே பொறுப்பாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம்

இதழ் 06 ஓகஸ்ட் 2002



உங்களுக்கும்தான்...


20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டமும் ஜீவனோபாயத் தடையும்

*-சட்டத்தரணி காசிநாதர் சிவபாலன்-*

சிறி லங்கா ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி (23.02.02) கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் 2:11 ஷரத்துப்படி, அத்திகதியிலிருந்து மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் படிப்படியாக தளர்த்தப்படும். 90 நாட்களுக்குள் கரையோரங்களிலுள்ள படை முகாம்களின் இரு பக்கமும் ஒவ்வொரு கடல் மைல் தூரத்திற்குள்ளும், கடற்பக்கமாக இரண்டு கடல்மைல் தூரத்திற்குள்ளும், கரையோரமாக உள்ள துறைமுகங்களுக்குள்ளும், துறைமுக வாயில்களிலும், குடாக்களிலும், முகத்துவாரங்களும் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பகலிலும் இரவிலும் மீன் பிடிப்பதில் உள்ள அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படவேண்டும். துரதிஷ்டவசமாக இது நடைபெற வேண்டிய கடைசித்தினமான மே மாதம் 23ம் திகதி, பயங்கரவாத தடைச்சட்டம்(பாதுகாப்பு வலயம்) விதிகள் இல 1,2002 பாதுகாப்பு அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்டது.



இச்சட்டமானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எழுத்துக்கும் உணர்வுக்கும் முரண்பாடானதாகும்.யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி (ஷரத்து 2.12) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள், தேடுதல்கள் நடத்தப்படக் கூடாது. அவை சாதாரண சட்டத்தின் கீழ்தான் மேற் கொள் ளப்படவேண்டும். ஆனால் மேற்கூறிய புதிய பாதுகாப்பு வலய விதிகள்பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழேயே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மீன் பிடித்தலுக்கான தடை முற்றாக விலக்கப்படவேண்டிய தினத்தில் மீண்டும் கடலில் படகுகள் செல்லும் பிரதேசங்கள் கட்டுப்படுத்தப்படல், வேண்டுமென்றே செய்த ஒரு செயலாகவும், கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் வடகிழக்கை மட்டுமே கொண்டிருப்பது அரசினர் தமிழ்ப் பிரதேசங்களின் மீது காட்டும் பாராபட்ச நடவடிக்கை ஆகும்.

தகுதி வாய்ந்த அதிகாரியே இப்பிரதேசங்களில் நடமாடுவதற்கு அனுமதிப் பத்திரத்தினை வழங்குவார். அவர் கொடுக்கும் அத்தாட்சிப் பத்திரம் ஒருவர் தடுப்பு வலயத்துள் நடமாடினார் என்பதற்கு தடயப் பொருளாக அமையும். தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிக்கும் பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரமும், அவ்வதிகாரிக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் எதேச்சாதிகாரங்களாய் அமைந்துள்ளன.

இந்த விதிகளின் 5ம் ஷரத்துப்படி, குறிப்பிட்ட தடைசெய்யப்பட்டுள்ள கடல் வலயத்தினுள் தனது இறப் பையோ, அல்லது காயத்தையோ அடையும் ஒருவருக்கு அல்லது சேதமடையும் படகிற்கு, வேறுசட்டங்களில் எவ்வாறு கூறப்பட்டிருந்தாலும் எந்தவொரு காப்புறுதி ஆவணத்தின் கீழும் இழப்பீடோ, நஷ்டஈடோ கொடுக்கப்படதேவையில்லை என்பது, மானுட நேயச்சட்டத்திற்கும் மனித உரிமைச் சட்டங்களுக்கும் எதிரான ஓர் எதேச்சாதிகார விதியாகும். கடல் கொந்தளிப்பு போன்ற காரணங்களினாலும் இரவிலும் ஒரு மீனவர் தற்செயலாக இவ்வலயத்தினுள் தள்ளப்பட்டு கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டால் அவருக்கு பிரத்தியேக காப்புறுதி இருந்தாற்கூட எந்தவொரு இழப்பீட்டுக்கும் அவர் உரித்துடையவராகார்.

திருக்கோணமலைத் துறைமுகத்தைப் பொறுத்த வரையில் அடிப்பாகத்தில் 5 கடல் மைல்களும், கடலினுள் 10 கடல் மைல்களும் கொண்ட 50 சதுர கடல்மைல்கள் தடை செய்யப்பட்ட வலயம் எனக் கூறப்படுகிறது. அப்படியாயின் கிண்ணியா, மூதூர், சம்பூர் என முழுக்கடற் பிரதேசத்தினுள்ளும் எமது மீனவர்கள் ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாது.

தாங்கள் இந்த விதிகளை கடுமையாக நடைமுறைப் படுத்த மாட்டோம் என்று கடற்படை உயரதிகாரிகள், பேச்சுக்களின் போது யுத்த நிறுத்த கடல் கண்காணிப்பாளர்களிடம் கூறினாலும் அவர்கள் தங்கள் கூற்றை மீறினாலும் கூட அது சட்டத்திற்குட்பட்ட செயலாகவே அமையும்.

யாழ்ப்பாண மீனவர் சங்க தலைவர்கள், கொழும்பில் அமைச்சர்களையும், உயர்படையதிகாரிகளையும் அரச அதிகாரிகளையும் சந்தித்து பல உத்தரவாதங்களைப் பெற்ற அடுத்த நாளே யாழ்ப்பாணத்தில் படையினரால் அவை மீறப்பட்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை தெரிந்ததே.

எனவேதான், அரசினதோ படையதிகாரிகளதோ சலுகைகளை நாம் நம்பியிருக்க முடியாது. இச்சட்டவிதிகள் முற்று முழுதாக விலக்கப்பட வேண்டும். இதுபற்றி நமது தமிழ்,முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்ந்து இவ்விதிகளை நீக்க போராடுகிறார்களா.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலப்பதிகாரத்தில் கைம்மைக் கொடுமை ஒரு புதிய பார்வை

- ஆ. சுதாகரன் -
மட்டக்களப்பு.

ஐம்பெருங்காப்பியங்களில் சங்ககாலத்துக்குரிய காப்பியமாக சிலப்பதிகாரம் திகழ்கின்றது. இதனை இளங் கோவடிகள் மூன்று முக்கிய கருதுகோள்களைக் கொண்டு ஆக்கியுள்ளார்.

1) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
11) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் போற்றுவர்
111.) ஊழ்வினை ஊட்டு வந்து உறுத்தும்

என்பவையே அவையாகும்.

இம் மூன்று காரணங்களின் அடிப்படையில் தோன்றிய சிலப்பதிகாரத்தினை நோக்கும் போது கைம்மைக் கொடுமை சிறப்பாக வெளிக்காட்டப்படுகின்றது. இதனை சிறப்பாக கண்ணகி பாத்திரத்தின் வாயிலாக அறியும் அதேவேளை பாண்டிமா தேவி பாத்திரத்தின் ஊடாகவும் அறியலாம். இவ்விருபாத்திரங்களையும் கைம்மைக் கொடுமை என்ற நோக்கில் இங்கு ஆராய விழைகின்றேன்.

கண்ணகி எனும் பாத்திரத்தினை நோக்கின் சிலப்பதிகாரத்தின் இன்றியமையாத முக்கிய பாத்திரமாக இளங்கோவால் படைக்கப்பட்டுள்ளது. கண்ணகி கற்புக்கரசியாக படைக்கப்பட்டிருந்த போதும் கோவலனை திருமணம் செய்து இல்லறத்தினை மேற்கொண்ட போதும் சரி, தன்னைவிட்டு கணவன் பிரிந்து மாதவியை அடைந்த போதும் சரி, மீண்டும் கணவன் தன்னை அடைந்த போதும் சரி அவள் ஒரு பேசாமடந்தையாகவே காணப்படுகின்றாள். அதுவரை பேசாமடந்தையாக படைக்கப்பட்ட கண்ணகி கோவலன் கொலையுண்ட சேதி கேட்டு பேய்க்கோலம் பூண்டு அரசவைக்கு செல்கின்றாள்.



அங்கு மன்னனை நோக்கி

*'தேராமன்னா செப்புவதுடையேன்*
*என்னறு சிறப்பினிமையவர் வியப்ப*
*புள்ளுறு புன்கண்டீர்த் தோனற்றியும்*
*வாயிற்கடைமணி புகுநீர் நெஞ்சுடத்தான்றன்"*

என்கிறாள்.

அத்தோடு இவளது கோலத்தினை வாயிற்காவலன் கூறுகையில்

*'அடர்ந்தெழுகுருதி யடங்காப் பசுந்துணிப்*
*பிடர்ந்தலைப் பீடமேறிய மடக்கொடி*
*வெற்றி வேற்றடக்கைக் கொற்றவையல்லள்*
*அறுவர்க்கிளைய நங்கையிறைவனை*
*ஆடல் கண்டருளிய வணங்கு-----"*

எனப் பலவாறு கூறுகின்றான். இவ்வாறான கோலம் பூணவும் இதுவரை பேசாமடந்தையாக காணப்பட்டவள் இங்கு மன்னனை நோக்கி கோபத்தின் உச்சக்கட்டத்தில் நின்று பேசவும் காரணம் என்ன? என நோக்குமிடத்து அதற்கான காரணம் யாதெனில் கைம்மைக்கொடுமை பற்றிய பயமே ஆகும் எனலாம். இதுவரை காலமும் தனது கணவனுடன் சந்தோசமாக வாழ முடியவில்லையாயினும் சுமங்கலி என்ற அந்தஸ்துடன் அவள் தனது கடமைகளை எதுவித இடையூறுமின்றி செய்து வந்தாள். ஆனால் இனி அதனை செய்ய முடியாது. ஏனெனில் அதற்கு சமூகம் இடமளிக்காது. அதாவது கைம்மைக் கொடுமை அக்கால சமூகத்தில் காணப்பட்டிருக்கின்றது. சமூகத்தில் காணப்பட்ட கைம்மைப் பழிக்கு ஆளாக வேண்டும் என்ற பயமும் அச்சமுமே இவள் கோலம் கொண்டவளாக உருவெடுத்திருக்க வேண்டும் என நினைக்கத் தூண்டுகின்றது. அடக்கமுடியாத கோபத்தினால் மதுரையைக் கூட எரிப்பதாக ஆசிரியர் காட்டி நிற்கிறார். எனவே இவ்வம்சம் அக்கால சமூகத்தில் கைம்மைக் கொடுமை எந்தளவு பெண்களை பாதித்திருக்கின்றது என்பதை வெளிகாட்டுகின்றது எனலாம்.

இனி பாண்டிமாதேவி எனும் பாத்திரத்தின் வாயிலாக கைம்மைக் கொடுமை எவ்வாறு ளெிப்படுகின்றது என்பதனை நோக்கின், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதற்கிணங்க அரசியல் பிழைத்தமையால் பாண்டியன் அவ்விடத்திலேயே உயிர் துறக்கின்றான். அவ்வேளையில் கணவனின் இறப்பைக் கண்ட மாத்திரத்தே பாண்டிமாதேவியும் உடன் உயிர் துறக்கிறாள். இந்நிகழ்வானது அக்கால சமூகத்தில் நிலவிய கைம்மைக் கொடுமையையே காட்டி நிற்கின்றது எனலாம். இங்கு அக்கால சமூகத்தில் கைம்மைக் கொடுமைக்கு பயந்தே பாண்டிமாதேவியும் உடன் உயிர் துறந்திருக்க வேண்டும் என எம்மை நினைக்க தூண்டுகின்றது.

இவ்வாறு இரு பாத்திரங்களின் வாயிலாக கைம்மைக் கொடுமையின் தன்மை பற்றி இளங்கோ சூசகமாக சிலப்பதிகாரத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார். என நினைக்க முடிகின்றது. இக்கைம்மைக் கொடுமைதான் எம்முன்னைய சமூகத்தில் காணப்பட்ட பெண்கள் உடன்கட்டையேறுதல் எனும் அம்சத்திற்கும் காரனமாக இருந்திருக்க வேண்டும். உடன்கட்டையேறுதல் எம்முன்னைய சமுதாயத்தால் மிக இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டிருந்தது என நாம் அறின்றோம். இவ் உடன்கட்டையேறுதலுக்கும் கைம்மைக் கொடுமைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக நினைக்கின்றேன்.

எனவே சிலப்பதிகாரத்தில் இளங்கோ மிக சிறப்பாகவும் அழகாகவும் அக்கால சமூகத்தில் காணப்பட்ட கைம்மைக் கொடுமையை படம்பிடித்து காட்டியுள்ளார் எனலாம். இவ்வம்சத்தினூடாக மானுடவாதமும் வெளிகிளம்புகின்றது எனவும் கூறலாம்.

**(கைம்மை - விதவை நிலை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரியற்கை மேலோர் பாட்டு

-சு. வில்வரத்தினம்-

*01*

இயற்கையை அச்சத்தின் மேலீட்டால் வழிபட்ட போதும்
அதிகாரச் சவுக்கோச்சி குதிரை விட்ட போதும்
இயற்கையோடு எமக்கு ஒட்டுறவற்று
விலகியே நின்றோம்.
இயற்கை மீட்டுகிற இனிய லயத்தோடு
இசைவு கொள்ள இன்னும் முரணுகிறோம்

இதனால் இயற்கைக்கும் எமக்கும் இடையில்
எப்போதும் முரணிசை

இயற்கையோடு இசைந்த இன்பமும்
இன்பத்தோடு இசைந்த வாழ்வும்
இயல்பார்ந்த லய மீட்டலில் தான் இருக்கிறது
இயற்கை விரித்த கைகளாய் திசைகள்
திசைகளின் நடுவில் திகழ்கின்ற இயற்கை
இயற்கையின் திகழ்ச்சி எதிலே இருக்கிறது?
மெய்யியற்கையில் திகழ்கிறது
மெய்யியற்கையின் வெளியுருக் காட்சிகள்
பொய்யல்ல; பின்னணியில் இயல்கின்ற
பேரியற்கைப் பெருவாழ்வியலின் மெய்த்தனம்

*02*

பேரியற்கையின் வெளிக்காட்டல்கள் தான்
பிரபஞ்ச இயற்கையும். நாம் பிறந்து
வளர்ந்த இம் மண்ணியற்கையும் மற்றும் பிறவும்
மண்ணியற்கையை மகிமையுறப் போற்றி
வாழ்ந்தால் அது எம்மை மடி கிடத்தித் தாலாட்டும்
வாழ்வியற்கைப் படுகையாகிறது.

இயற்கை விரித்த பசும்புல் வெளியை விடவுமா
இனியதொரு படுக்கை உள்ளது?
வேம்பு தன் வேர்திரட்டிப் போட்ட
நிழலாசனத்தை விடவுமா ஓர் அரியாசனம்?
சாமரம் வீசுதல் போல வேம்பு தருகின்ற
காற்றை விடவுமா வேறொரு கைமருந்து?
காற்று இயற்கை மருந்தாகவும் உள்ளதால்
மருந்து என்றும் அதற்குப் பெயர்

இயற்கை ஓர் இனிய மருத்துவிச்சி
மருந்தியற்கையின் மகிமையை
எல்லா விலங்குகளும், ஊர்வனவும் பறப்பனவும்
நன்கறியும்
பழங்குடி இனங்கள் இதன் பயன்பாடு அறிவர்

நாமோ நவீன மனிதர்;
மருந்தியற்கையை கைவிட்ட மனிதர்
இயற்கைச்சூழலை இழந்த நாமும் இயல்பாக இல்லை
இயல்பாக இருப்பதென்பது நமக்கு நாமே
மருந்தாயிருப்பது
இயல்பான மனம் நோயில்லாத மனம்
இயற்கை தன்னைத் திறந்து வைத்திருப்பது போல்
எம்மையும் திறந்து வைத்திருக்கப் பழகினால்
பேரியற்கை தன் பின்னணியை எமக்குத் திறந்து வைக்கிறது
எதற்கும் இயற்கையின் இசை மீட்டலைக்
கற்றுக் கொள்வதால் அமைகிறது.



*03*

இயற்கையோடு எமக்கு தோழமை அற்றது
நாலாபுறமும் விரிந்துள்ள இயற்கையோடு
கூட்டுச் சேர்ந்து,காலாற நடந்து போன
நடை பயணங்கள் தொலைந்து போய் விட்டன
கால்களில் சக்கரம் பூட்டிக் கொண்டு பறக்கின்றோம்
நின்று நிதானித்து நிலவின்பால் பருகி
வெள்ளிகளைச் சரம் கோர்த்து
இரவின் ஏகாந்த சங்கீதம் கேட்டு
இன்புறுதல் என்பது இன்றில்லை

விடியலில் எழுந்து வருகின்ற சூரியர்க்கு தலைசாய்த்து
இன்றைய வாழ்விற்கு ஒளியூட்டுவாயென வரம் கேட்டு
பிள்ளைச் சிரிப்பு சிரிக்கின்ற பூஞ்செடிக்கும்
ஒரு குடம் செல்லத் தண்ணி வார்த்து
தோகை விரிக்கின்ற வாழையைத் தோழமையுடன் தடவி
தேவாரப் பாட்டோடு வாழ்வின் கதவைத் திறக்கின்ற
காலை இயற்கை காணாமல் போயிற்று

பெண்களின் இயல்பான பாட்டோசை இப்போதில்லை
பிள்ளைக்குத் தாலாட்டு. சாய்ந்தாடம்மா சாஞ்சாடு.
எதுவுமே இல்லை
பதிலீடாக வானொலிகள், தொலைக்காட்சிகளின்
வக்கரிப்புகளும் கொக்கரிப்புகளும் தான்.
பிள்ளைமையை பேணி வளர்க்கின்ற
பெரு மருந்தாயிருந்த பாட்டுக்கள் போயின
இயற்கையின் மடி தொட்டுக் கறந்த
இன்பப் பாட்டுக்களை பெண்கள் தொலைத்தார்கள்
எதுவுமே இயல்பாக இல்லை.
பிள்ளைமை என்பதும் பிறழ்விலேயே தொடங்குவதாயிற்று

*04*

பச்சைமலை பவள மலை
பாங்கான உச்சி மலை
அதோ தெரிகிறது பார்
மொட்டையடிக்கப்பட்ட முது மலை
முன்னரது பச்சை மரங்களடர்ந்த முது மலைக்காடு
இயற்கைத் தாய் தனது இருதயத்தை எவர்க்கும் தெரியாமல்
அங்கே தான் ஒளித்து வைத்திருந்தாள்
அந்தமூடு மந்திரத்திற்குள்ளிருந்துதான் அவள்
மழையை தருவித்தாள்
நதிகளைப் பிறப்பித்தாள்
மாசில்லாத காற்றை உயிர்த்தாள்
எல்லா அழகுகளினதும் கொள்ளிடமாக
இரத்தோட்டமாய் இருந்தவள் அந்த முதுமலையாட்டி

கோடரி மனிதர் அழகின் கொள்ளிடத்துட் புகுந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன மரமறுக்கும் இயந்திரமும் புகுந்தார்
போட்டி போட்டு அந்த முதுமலையாட்டியின்
கன்னிமையை வேட்டையாடித் தீர்த்தார்
காட்டகத்தாளின் கன்னிக் கூந்தல் கருகுகிற நெடி
அதோ காற்றில் வருகிறது
முதுமலையாட்டி முதுமலையாட்டி
மொட்டைத்தலைச்சியான முதுமலையாட்டி
நீ உனது பசுங் கூந்தலை இழந்தாய்
உனது உயிர் மூச்சை நாமிழந்தோமே

மாசிலாத காற்றே வாவா என்கிறோம்
காடுகளின் உயிர் மூச்சின்றி வருமா அது?
மூலிகைகளின் வாசமிழந்த காற்றில்
கந்தக வீரன் வேறு ஏறிக் குதிரை விடலானான்
கந்தக நெடி விளைத்த சாக்காட்டுச் சூழலை உயிர்ப்பிக்க
இனியெந்த அனுமன் பிறந்து வந்தாலும்
ஏந்திவர எங்கிருக்கிறது மூலி மலைக்காடு
நதிகள் அளைந்து வரும் மூலிகைகளின் புனிதநீர்
மனிதனைப் புடமிட்டெடுத்தன. புண்களை ஆற்றின
இன்றவை சாக்கடைகளின், தொழிலகக்கழிவுகளின்
புகலிடமாகின, புனிதம் கெட்டுப் போயின
போய்க் கலக்கும் கழி முகங்களில்
வண்டல்களுக்குப் பதிலாகக் கழிவுகளின் அடைகள்

**05**

மனிதா உனை நிறுத்திச் சில கேள்விகள்
மலைகளை மொட்டையடித்தாய்
காடுகளை வஞ்சித்தாய்
நதி நீர் நிலைகளை நாறடித்தாய்
காலடி மண்ணியற்கையையும்
இரசாயன உரங்களால் சீரழிக்கின்றாய்
வானியற்கை கூட உன்னால் வஞ்சிக்கப்பட்டுள்ளது
வானமும் மண்ணும் வஞ்சனைக்குள்ளான கதைகள்
எழுதி எழுதி மாளாதவை

தண்ணீரும், மழைநீரும் நதி நீரும் சேர்ந்து
முந்நீர் எனப் பெயர் பெற்றது கடல்
இயற்கைத் தாய் எமக்காக சேகரித்த திருப்பாற்கடல்
இதையும் கழிவகக் கிடங்காக மாற்றி விட்டாய்
எண்ணெய்க் கழிவுகள், அணுவுலைக் கழிவுகள்
அனைத்தினதும் கழிநீர் எனவும் கடலம்மை பெயர் பெற்றாள்

கடலம்மை, தரைவாழ் உயிரினங்களினதும் தாயகம்
தண்ணீரிலிருந்து உயிரினம் தரைக்குத் தாவியது
யுகவளர்ச்சியாம்
யுகவளர்ச்சிகளின் பெறுபேறாய் மனித உயிரினங்களின்
தாயகமான பாற்கடலை நச்சுக் கழிவுகளின்
சாக்கடை ஆக்கி விட்டாய்
கடல் வாழ் உயிரினங்கள் எல்லாவற்றினதும் ஜலசமாதி
மரணக் கிடங்குகளாகவும் மாற்றி விட்டாய்
காற்று ஒடுங்கி உயிர்த்தெழும் நுரையீரலும்
கடலம்மையிடம் தானிருக்கிறது. அதுகளின்
காதல் மூச்சையும் நாசப்படுத்தி விட்டாய்

ஆதித்தாய் அழுகிறாள். அவளுடைய ஒப்பாரி
காற்றில் எழுகிறது. கடலலைகளில் குமுறுகிறது
நடைமெலிந்து காய்ந்த நதி வழிப் பாடுகளில்
தண்ணீர் தண்ணீரென்று தாகம் மேலிடக் கதறுகிறது
ஆதி இயற்கை சுற்றிப் படர்ந்த அழகெலாம் வற்றி
சாக்குழிக்குளிருந்து நீள்கின்ற சவக்காட்டின்
மொட்டை மரங்களென நின்று புலம்புகிறாள்
வாய்க்கரிசி போடுதற்கா மானுடனே வாழ்வு
தரித்திருக்கின்றாய்?

என்ன அவசரம்? எங்கே ஓடுகிறாய்?
எத்தனையோ தலைமுறைகளுக்குரிய வாழ்விடத்தை
வற்றடித்து விட்டு என்னவளம் பெருக்க ஓடுகிறாய்?

உனக்கென்று தனியாக ஒதுக்கிய சுயநல வட்டத்திற்காக
கோடானு கோடி உயிர்களின் விடுதலைச் சூழலை
பாழடித்து விட்டு எங்கே பரபரப்பாக ஓடுகிறாய்?
பாழடிக்க இன்னும் மீதமிருக்கிறதா?

எஞ்சியிருக்கும் கணங்களையேனும் சிந்தனைக்கு ஒதுக்கு
நில், நிதானி, உன் காலடிக் கீழ் உனக்கு
ஆதாரமாய் இருக்கும் அன்னையின் இதயம்
உன்னை அன்போடு அழைக்கிறது
தயவு செய்! சற்றே உற்று நோக்கு

தெருவின் ஓரமாய் புன்னகைக்கிறது பார்
புழுதியினுள்ளும் ஒளி பூத்திருக்கும் ஒரு துளிப்பூ
பேரியற்கையிலே அதுவுமோர் பிறப்பாக்கம்
தன் புன்னகையால் தனை ஈன்ற சூழலுக்கு
நன்றி சொல்லும் பாணியிலே தலையசைக்கின்றது

மண்ணில் வந்து போகின்ற பாதசாரியான நீ
உலகம் அழியப் போகிறதெனினும் ஓடோடி
எதைக் காப்பாற்றப் போகிறாய்?
கடைசியாய் உனது கையிலுள்ளவோர்
பிஞ்சுச் செடியை நல்லியல்பில் நட்டுவிட்டுப் போ
பேரியல்பில் இதழ் விரிக்குமோர் பிறப்பாக்கமாகட்டும்.

***07-08-2002***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ வேணும்

– அம்மணன் –

சத்தம் போட்டுக் காதல் கேட்டுப் பதிலை நீயும் பெற வேணும்
யுத்தம் போகும் வீரர் போல் நீ நிமிர்ந்து நின்றே பேசோணும்

கண்ணைப் பார்த்துக் கதைத்தவாறே எந்தன் எல்லாம் அள்ளோணும்
கண்ணீர்,கோபம்,புன்னகை என்று உந்தன் எதையும் சொல்லோணும்

ஓடும் ரயில் போய் சேரும் வரையில் ஆன்மீகத்தை அலசோணும்
சூடாய் எங்கள் வீட்டுக்குள்ளே அரசியல் எல்லாம் உரசோணும்

கடலின் தரையில் பாலியல் கொஞ்சம் பயமில்லாமல் பேசோணும்
மடியின் மேலே தலையை வைத்து கவிதை சொல்லக் கேக்கோணும்

கொட்டும் மழையில் ஓட்டிக்கொண்டே ஆணாய்ப் பெண்ணாய் மாறோணும்
தொட்டுப்பார்த்தும் உற்றுப்பார்த்தும் ஓமோன் எல்லாம் பூக்கோணும்

ஏதும் எனக்கு கண்ணீர் வந்தால் தோளில் என்னை தாங்கோணும்
மாதவிலக்கின் சோர்வில் எந்தன் மார்பின்மேலே தூங்கோணும்

என்னைப்போலே நீயும் கூந்தல் வசதிப்படிதான் வளர்க்கோணும்
உன்னைப்போலே தாயாய் மாற என்னைக் கொஞ்சம் பழக்கோணும்


மெல்லிய தோலின் கொழுப்பினடியில் வைரத்தசையை வளர்க்கோணும்
தொல்பொருள்கால தொல்லைகள் வந்தால் தூர துரத்தியடிக்கோணும்

மற்றவரோடும் பழகிப்பார்த்து காதலன் என்னைத் தெரியோணும்
மற்றவன் இன்னும் பொருத்தமென்றால் கலந்துபேசிப் பிரியோணும்

அடிமைக்காதல் வேண்டாம் நாங்கள் மனிதக்காதல் செய்யோணும்
வெடிபட்டாலும் பரவாயில்லை விடுதலையோடே சாகோணும்

விலங்கு பூட்டும் சலங்கையெல்லாம் குப்பைக்குள்ளே வீசோணும்
இலங்கை நாட்டின் தமிழைப்போலே வெப்பத்தழலாய் நீ வேணும்

வெட்டிக்கடவுள்,கற்பு,பெண்மை எல்லாப்பொய்யும் எரிக்கோணும்
கட்டுத்தளைகள் அறுத்து வெறுத்து விட்டுத்தொலைவாய்ப் பறக்கோணும்



# பஞ்ச பூதங்கள் கற்றுத் தந்தவை

நிலம் எனக்குக் கற்றுத் தந்தது:
எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள,
எல்லாவற்றையும் கடந்து வாழ,
நிலையானது மரணமென்றறிந்து
ஒரு பருவத்திலிருந்து
இன்னொன்றாய் மாற,
அகத்தும் புறத்தும்
இயங்கிக் கொண்டிருக்க...........

நெருப்பு எனக்குக் கற்றுத்தந்தது:
தீவிர தாகத்தால் ஜொலிக்க,
நடனமிட்டு அனைத்தையும் சாம்பலாக்க,
துக்கத்தால் புனிதப்படுத்த,
கடல்களின் வயிற்றிலும்
கரும்பாறைகளின் இதயத்திலும்
ஒளிப்பிழம்பேற்றித் தியானிக்க வைக்க...........

நீர் எனக்குக் கற்றுத்தந்தது:
கண்களிருந்தும் மேகங்களிலிருந்தும்
கட்டளையின்றிப் பொழிந்து தள்ள,
மண்ணிற்கும் உடலுக்கும் அடியில் இறங்கி
இரண்டிற்கும் மலரும் தளிரும் தந்து அணிசெய்ய,
ஊரையும் பேரையும் உருவி எறிந்து
ஞாபகங்களின் எல்லையில்
மகா நீலத்தில் கரைந்து போக...

காற்று எனக்கு கற்றுத்தந்தது :
உருவிலியாய் மூங்கில்கள் வழியே பாட,
இலைகளின் வழியே உபதேசிக்க,
விதைகளுக்குச் சிறகுவழங்க,
இளங்காற்றாய்த் தாலாட்ட,
புயலாய்க் கடுஞ்சினம் பூண...

வானம் எனக்குக் கற்றுத்தந்தது:
பௌர்ணமிகளால் நிரம்ப,
அமாவாசைகளால் காலியாக,
உதயத்திலும் அஸ்தமனத்திலும்
ஒரே மாதிரி சிவந்திருக்க,
எங்கும் இருக்க,
எங்கும் இல்லாதிருக்க...

பஞ்ச பூதங்கள் எனக்குக் கற்றுத்தந்தன:
ஒன்று சேர,கட்டவிழ,
உருவம் மாற,
உருவம் நீங்கி முக்தி கிடைக்கும் வரை...

மலையாள மூலம் : சச்சிதானந்தன்
தமிழில் : சிற்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு ஊசலின் வேட்டை

–சந்த்ரராம்–


*பிரபஞ்சம் நாதமயமானது. ஏதொரு பொருளைத் தட்டினாலும் நாதம் பிறக்கும். நாதமில்லாத வஸ்து உலகத்திலில்லை. பிரபஞ்ச உற்பத்திக்கு மூல காரணமாக இருக்கிற நாதத்துக்குள்ளே, சர்வசக்தனும் சர்வ வியாபியுமாகிய சர்வேஸ்வரர் பிந்து வடிவில் இருப்பதால் இறைவனை "நாத பிந்து கலாதி நமோநம" என்று வழிபடுகின்ற வழக்கங்களும் இருக்கின்றன.*

*–சுவாமி கெங்காதரானந்தா -(நாதோபாசனை, சித்த சோதனை)*

நாதம் - பிந்து தான் அலை - துகள்.

அலை - துகள் ஆராய்ச்சி தான் பௌதிகத்தின் அடிப்படை ஆராய்ச்சியாக நவீன பௌதிக விஞ்ஞானிகளின் பெரும் கவனத்தை ஈர்த்துக்கொண்டு வருகிறது.

ஒலி அலைகளிலிருந்து கொஸ்மிக் (Cosmic) கதிர்கள் வரை எல்லாம் அலைகளே. நாம் காணும் பிரபஞ்சம், இந்த உலகம் எல்லாம் எமக்குத் தெரிவதற்குக் காரணமான ஒளி அலைகள்.ஒலி அலைகளுக்கும் கொஸ்மிக் கதிர்களுக்கும் இடையில் அமைந்துள்ள கண்ணுக்குப் புலப்படும் $7.8 x 10^{-7}$ m -




$3.9 x 10^{-7}$ mm வரையான அலை நீளம் கொண்டவை.

இந்த அலைகள் பற்றிய அடிப்படை விளக்கத்திலிருந்து, நவீன ஆராய்ச்சிகளின் அப்போதைய தரவுகள் பற்றி எழுதப்பட்டுள்ள புத்தகத்தின் பெயர்தான் இக் கட்டுரையின் தலைப்பு.

"காட்டு ஊசலின் வேட்டை"(Stalking of the wild pendulam) அதனை எழுதியவர் இட்சாக் பென்டொவ் ( ITZHAK BENTOV) என்பவர். இவர் 1923 இல் செக்கோசெலாவாக்கியா வில் பிறந்து 2வது உலக மகா யுத்தத்தின் போது இஸ்ரேல் சென்று 1954ம் ஆண்டு அமெரிக்கா வந்தார்.

தொழினுட்பத் துறையில் ஆலோசகராக இருந்த அவர் உயிர் மருத்துவப் பொறியியல் துறையில் விசேட கவனம் செலுத்தினார். பிரக்ஞையின் மாற1-1050று நிலைகள் பற்றி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்த சமயம் 1979ம் ஆண்டு இறந்தார்.

அவர் நடத்திய ஆராய்ச்சிகளில், தியானம் மூலம் பிரக்ஞையில் ஏற்படும் மாற்று நிலைகள் பற்றிய விடயங்கள், " Physio Kundalini Syndrome"என்ற தலைப்பில் இப்புத்தகத்தின் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது.


"எல்லா வயதிலுமுள்ள இளைஞர்களுக்கு எழுதப்பட்டது இப் புத்தகம்" என்று தன் முகவுரையில் கூறும் இவர், "வியக்கும் சக்தியை இழக்காதோருக்கு அண்டத்தின் மாதிரிப் படம் ஒன்றினை சித்தரிக்கும் முயற்சியே இந்தப் புத்தகம்" என்றும், "விளங்காதவை, இல்லை என்ற நிலைப்பாட்டை எடுக்காமல் விளங்காதவற்றையும் பரிசீலிக்கும் பக்குவம் உடையோருக்கும், இளம் விஞ்ஞானிகளுக்கும் மனதில் சில புரட்சிகரமான கருத்துக்களை ஊன்றி விட இது முயற்சிக்கிறது". என மேலும் குறிப்பிட்டுள்ளார். மறுபிறப்பை மறுக்காமல் அது உண்மை என்று கூறுகிறார்.

கேள்விக்குரிய, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாத விஷயங்களை, இயலுமான வரையில் தெரிந்த, இதுவரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை விளக்கங்களுடன் முரண்படாத வகையில் கூறி, இப் பிரபஞ்சத்தின் மாதிரியை விளங்கப்படுத்த முயல்கிறார்.

இம்முயற்சியில் முதல் அத்தியாயத்தில் அலைகள் பற்றிய பௌதிக விளக்கங்களைத் தருகிறார். Hologram(பூரண பதிவுப் படம்) பற்றிய விபரமும், அலைவுகள், பரிவு நிலைகள். Rhythm entrainment, அலைகளின் பல குணாதிசயங்கள் என்பவை பற்றியும் எளிமையாக விளக்குகிறார். வீணையிலுள்ளது போன்று இருபுறமும் கட்டப்பட்ட தந்திக் கம்பியை மீட்டி எழும் 'நிலையான' ஒலி அலைகள் பற்றியும், தகடுகளைத்தட்டி எழும் ஒலி அலைகள் தகட்டின் மேற்பரப்பிலிருக்கும் துகள்களில் ஏற்படுத்தும் உருவ அலைகளைப் பற்றியும், ஒரே சமயத்தில் தண்ணீரில் போடப்பட்ட கற்களால் நீர் மேற்பரப்பில் ஏற்படுத்தப்படும் அலைகள், ஒன்றில் ஒன்று தலையீடு செய்யும் போது உருவாகும் அலை உருவங்கள் பற்றியும் கூறியுள்ளார்

பூரண பதிவுப்படம்(HOLOGRAM). எப்படி உருவாகிறது என்றும், அதன் குணாதிசயங்கள் பற்றியும் எழுதியுள்ளார்.

Hologram என்பது,லேசர் கதிர்களை ஒரு பொருளில் படவைத்து அதன் பிம்பத்தையும், அரைவாசி ரசம் பூசப் படாத கண்ணாடி மூலம் நேரடியாக தெரியும் பிம்பத்தையும் சேர்த்துப் படம் பிடிப்பதனால் வரும் படம். இப்படத்தினூடு லேசர் கதிர்களைப் பாய்ச்சினால் வெட்ட வெளியில் முப்பரிமாணத் தோற்றத்துடன் அப்பொருள் தோன்றும் இப்படம் தவறி விழுந்துசிதறினால், சிறிய துண்டு ஒன்றினூடாக லேசர் கதிரினை




செலுத்தும் போது முழுமையான பிம்பம் உண்டாகும்.

" அதி நுண்காட்டி(Super microscope)மூலம் பார்த்தவை" என்ற தலைப்பில் இயற்கையை நுணுக்கமாக ஆராய்கிறார். ஐதரசன் அணுவிலும் கூட மையத்திலுள்ள கருவிற்கும் அதைச் சுற்றிவரும் இலத்திரனுக்கும் இடையிலான இடைவெளி 10,000 மடங்கு என்று கூறி, அண்டத்தில் பொருளைவிட வெற்றிடமே அதிகம் என சுட்டிக் காட்டுகிறார்.

அணுவின் மையத்திலுள்ள கருவை நுணுக்கமாக ஆராய்ந்தால் அங்கும் பருப்பொருட்கள் இல்லாது போய், சக்திமயமான சுருங்கி விரியும் பரவெளியைத்தான் காணலாம் என்பதை குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட தளங்களில் ஏற்படும் மாற்றங் கள் அண்டத்தின் சகல பகுதிகளையும் பாதிக்கின்றன என்பதையும் விளக்குகிறார். தியான நிலையில் இருக்கும் போது எமது கோளின் மின் மண்டலத்துடன் பரிவு நிலை உண்டாகிறது என்று குறிப்பிடுகிறார்.

எமது புலன்கள் பௌதிக யதார்த்தத்தை, செயல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலின்மை என்று பரிபாஷையில் எமக்கு உணர்த்துகிறது. இப்பரிபாஷையை ஓர்ஊசலின் அசைவுக்கு ஒப்பிடலாம். ஊசல் தன் ஓய்வுப் புள்ளியை அடையும் போது, அதியுயர் வேகத்தில் பொருண்மை அற்ற நிலையை மிகக் குறுகிய பொழுதிற்கு அடைகிறது.

அசைவு, மாற்றம் இன்றேல் தன்னிலை அல்லது பரநிலை யதார்த்தம் இல்லை. இதையே "அசைவின்றி அறியும் உலகில்லை" என்று திபெத்திய பௌத்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

காலத்தினோடு செய்யப்பட்ட பரிசோதனைகள் பற்றியும் இப்புத்தகத்தில் குறிப்பிடுகிறார். ஒவ்வொருவரும் இதைச் செய்து பார்க்கலாம் என சில வழிமுறைகளையும் கூறுகிறார். இந்த"நேரப்பரிசோதனை" பரநிலை-தன்னிலை என்பன காலதேசப் பரிமாணங்களில் இருப்பதைக் காட்டுகின்றன. இவையிரண்டும் இயல்பில் ஒன்றோடொன்று இணைந்து இருக்கின்றன.மாற்றுப் பிரக்ஞை நிலைகளின் போது இவை வெவ்வேறாகின்றன. அப்போது தன்னிலை காலதேச பரிமாணத்தில் நாம் செயற்படலாம்.

இவை தொலைவில் உணர்தல், தொலைவிலறிதல் போன்றவற்றை விளக்குகின்றன.

அறிபவனின் மனசு ஒரு குறுகிய காலத்திற்கு சர்வவியாபகம் பெறுகிறது. இந்த குறுகிய காலம் தான் ஊசல் தன் அசைவின் திசையை மாற்ற எடுத்துக் கொள்ளும் நேரம்.

எமது உடம்பு கூட அலைவுகள் தான் (Oscillators). உடம்பை ஆக்கும் அணுக்களும் அலைவுகளே. அணுஅதிர்வு நேர வேகத்தில் நாம் பரவெளிப் பரிமாண நிலையை அடைந்து சில செக்கன்களில் பல தடவைகள் மீண்டும் மீண்டும் பழைய நிலைக்கு வருகிறோம்.

எனினும் எமது தன்னிலை நேரத்தை பிரக்ஞையின் மாற்றப்பட்ட நிலையில் பன்மடங்கு விரிவடையச் செய்யலாம். இந்த நேரங்களில் ஏனைய 'மனசு'களைப் பற்றிய தகவல்களை 'அங்கே'யிருந்து சேகரித்துக் கொண்டு வரலாம். இதனை அதிகளவு பரநிலை நேர்த்தை எடுக்காது செய்ய முடியும்.

ஆகவே எமது யதார்த்த உலகிற்கும், வெளியே இருக்கும் பலருடன் பகிர்ந்து கொள்ளும் மறுபுற யதார்த்த உலகிற்கும் மீண்டும் மீண்டும் போய்வரும் பயணமே எமது யதார்த்தம்.

விரிவடைந்த உயர்நிலை பிரக்ஞை, பரவெளியில் எமது சித்தத்தின் விரிவையே குறிக்கிறது. சடத்தின் பரிணாமத்தை, பிரக்ஞையின் பரிணாமத்தை வைத்து விபரிக்கின்றார். பிரக்ஞையின் விரிவடைந்த உயர்நிலை போன்று பரிணாமத்தின் உந்தல் மேலும் மேலும் விரிவடைந்து சிக்கல் தன்மை பெற்ற (Complex) நிலையிலேயே சடம் 'உயிர்' தன்மை பெறுகிறது. கீழ் மட்டங்களில் இந்த உயிர் தன்மை சூழலுடன் முழு உறவை வைத்திருக்க இயலாது. மனித நிலையில் சூழலுடன் உள்ள உறவாடலும் சூழலைக் கட்டுப்படுத்தலும் விரிவடைகிறது. இது மேலும் வளர்ந்து பரிபூரணநிலையை, தெய்வீக நிலையை அடைகிறது.

யதார்த்தத்தின் பட்டியலில் பரிபூரணம் தான் தலையாயது. பரிபூரணம் தான் எல்லா யதார்த்தத்தினதும் அடிப்படை. வெளிப்படா நிலையில் பரிபூரணம் எல்லையற்ற, எல்லாம் வல்ல விவேக நிலையின் அழுத்த சக்தியாக,வெளிப்படாத சக்தியாக இருக்கிறது. அது மீட்டப்படும் போது அறியக் கூடிய பௌதிக பொருளாகவும் தனிப் பொருளாகவும் மாறுகிறது.

இயற்கை-அல்லது பொதுப்படச் சொன்னால் படைப்பு-தொடர்ச்சியான யதார்த்தங்களின் நிறமாலை எனக் கூறலாம். தற்போதைய மனிதர் பெரும்பாலான பொழுதுகளில் பௌதிக யதார்த்தத்தில் செயற்படுகின்றார்கள். நாம் அயலிலுள்ள வேறு நான்கைந்து யதார்த்தங்களிலும் செயற்படுகிறோம்.

சில நடைமுறைகளால் பிற யதார்த்தங்களிலும் செயற்பட எம்மை நாம் பயிற்றிக் கொள்ளலாம். பிற யதார்த்தங்களில் வெற்றிகரமாகசெயற்படுவதனால் அவ்வவ் யதார்த்த அதிர்வெண்களுக்கு ஏற்ற வகையில் எமது உடலை, வாகனத்தை பண்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த சரீரங்கள் உயர் ஸ்வரங்களைப் போன்று பல பிறவிகளில் சேர்ந்த தகவல்களை கொண்டுள்ளன. இந்த உயர் சரீரங்கள் எமது பௌதிக உடலை அண்டியே மையப்பட்டுள்ளன.


ஆயினும் அவை உடலின்றி அசைந்து சுதந்திரமாக செயலாற்றும் திறனுடையன. 'மரணம்' என்று அழைக்கப்படும் மாற்று நிலையின் போது அவை எமது உயரிய கோசங்களாக பௌதிக உடலை விட்டும் தம் பயணத்தை தொடர்கின்றன. அங்கு நிலவும் யதார்த்தம் முன்பிருந்த பௌதிக யதார்த்தமாக பிரக்ஞைக்குப்படும். மெல்லியதாக இந்தப் பிரக்ஞை அலகு பௌதிக உலகத்தோடு ஈடுபடலாம்.

எண்ணங்கள், ஆசைகள் மூளையில் உதயமாவன அல்ல.அவை மூளையில்,குறிக்கப்பட்ட கோசங்களால், தளங்களால் ஏற்படுத்தப்படும் நுண்ணிய தாக்கங்களே. இவற்றை மூளை எண்ணங்களாக மாற்றுகிறது. 'எண்ணம்' அடையாளம் காணப்படக் கூடிய படிநிலைகளுக்கு கீழ் உள்ளது.

அர்த்தமுள்ள விஞ்ஞான வெளிப்பாடுகள், உணர்ச்சிப் பாய்ச்சல்களினால் ஏற்படுபவை. இவற்றின் உண்மையை தன்னளவில் கண்டறிய முடியும். இது தன்னிலை உறுதிப்படுத்தலே. இந்த அறிவை பயன்படுத்தக்கூடிய தருணம் இப்போது வந்துள்ளது. இந்த அவதானம் பருஉடலுக்கும் சுத்த ஆன்மாவிற்கும் பாலமாக அமைகிறது. இதை 'மனசு'(Psyche) ஆன்மா (Soul)என்று அழைக்கலாம்.

உயர்ந்த சுயம்கள்பரிசுத்தமானவை. அவை உடலோடு உறவாட வேண்டுமானால், மனசு (Psyche) அல்லது ஆன்மா மூலமே தொடர்பு கொள்ளலாம். உயர் ஆன்மாக்கள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து எப்போதும் தொடர்புடையனவாக உள்ளன. தற்போதைய விஞ்ஞானிகளால் விரும்பப்படும் பிரபஞ்சத்தின் மாதிரி, பிரிட்மன் கமாவ் இனுடையது. அதன்படி பிரபஞ்சம், அண்டத்திலுள்ள பொருட்கள் அனைத்தும் ஒரு புள்ளியில் மையம் கொண்டிருந்த வேளை ஏற்பட்ட பெரு வெடிப்பினால் (BIGBANG) உண்டாகி விரிந்துகொண்டே இருக்கிறது.


முதலில் பொருள் அதி உஷ்ண நிலையில் அதியுயர் அதிர்வெண்ணுடைய கதிர்களாக இருந்து விரிவடையும் போது படிப்படியாகக் குளிர்ச்சியடையத் தொடங்கியது. பிரபஞ்சம், சிறிது







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்வட்டமான கோதுடைய உருவத்தைக் கொண்டது.அதன் ஒரு பகுதி பீய்ச்சும் குவாசர் மாதிரியிலானது. இந்த நீள்வட்ட அண்டத்தின் மத்தியில் கருபோன்ற திண்மை மிக்க பகுதி உண்டு. அங்கு கருந்துளை(Black hole)வெண் துளை (White hole) என்பவை உண்டு. அண்டத்திலுள்ள அனைத்துப் பொருட்களினதும் ஒட்டு மொத்தமான ஆரம்ப இடமும்




ஆதார இடமும் அதுவே.வளைந்த வடிவிலான அண்டத்தின் ஒரு மிகச்சிறிய பகுதியே எம்மால் அவதானிக்கக்கூடிய கண்ணுக்குப் புலனாகும் பிரபஞ்சமாகும்.

மூடிய பிரபஞ்சத்தின் வளைந்த பகுதியின் மத்தியில்




பிரபஞ்ச முட்டை

பரவெளிக்கு வித்தான கருவெளி(Proto space) இருக்கிறது. இவ்வெளியில் ஒளி புக முடியாது. ஆனால் 'மனசு'பயணம் செய்ய முடியும்.

குறுகிய நேரத்தில்,சகல அறிவையும் உள்ளடக்கிய எமது மனம் அதியுயர் முடிவிலி வேகத்தில் விட்டுவிட்டு விரிந்து சுருங்கிக் கொண்டு இருக்கிறது. இது ஏனைய பிரக்ஞைகளின், மனங்களின் தாக்கத்தால் தலையீட்டுக் கோலத்தை உண்டாக்கிறது. இந்தக் கோலம் பரிபூரணப் பதிவுப்பட (Hologram) குணாதிசயம் உடையது. இவ்வாறான சகல அறிவுத் தகவல்கள் அடங்கிய தலையீட்டுக் கோலத்தையே 'பிரபஞ்சமனம்' (Universalmind) என்று கூறுகின்றோம். எவரொருவரால் தனது தன்னிலை நேரத்தை விரித்து கூடிய பொழுது அங்கு நிற்க முடியுமோ அவரால் தேவையான உபயோககரமான தகவல்களை திரட்டி, மீள் வருகையின் போது அவற்றை விபரிக்க முடியும்.

பொருளுக்குப் பிரக்ஞை உண்டு. பொருள் பிரக்ஞையே. எமது பூமிக் கோளுக்கு பெரிய பிரக்ஞைஉண்டு. சூரியனுக்கும் அப்படியே. பொருளிலும் உயிருள்ள கலங்களிலும் உள்ள ஆரம்ப பிரக்ஞை அவற்றை பரிபாலிக்கிறது. உயரிய பிரக்ஞையான மனசு மனித உடலில் சீவிக்கிறது. ஆனால் அதனின்றும் சுதந்திரமானது. கோள்களுக்கும் சூரியனுக்கும் நிரந்தர வதிவிட பிரக்ஞை உண்டு. உயரிய பிரக்ஞை, விவேகம் அவற்றை மையமாக, தங்குமிடமாக உபயோகிக்கின்றது. இந்தப் பிரக்ஞைகள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையன. உறவாடுகின்றன. இவை தகவல் நிறைந்த பூரணப்பட கோலங்கள் (Holograms). பிரபஞ்சத்தின் தொடர்புகள் அனைத்தும் இணைப்புடையவையும், உடனடியானவையுமாகும்.


பூதவுடலின் மரணத்திற்குப் பின் ஆன்ம மனசு தனது இடத்திற்கு திரும்புகிறது. அது தனது பரிணாம வளர்ச்சியைப் பொறுத்து தனக்குரிய இயல்பான பரிவுடைய யதார்த்தக்களத்தை(Band)அடைகிறது.

எமது பூதவுடல்கள் ஒழுங்குபடுத்தும் களத்தினால் உண்டாக்கப்பட்டவை. இக்களங்கள் காலத்தினால் மாற்றமடையும் நான்கு பரிமாணம் கொண்ட மின் காந்த பூரணப்படக் கோலங்கள். சூக்குமமான சரீரமற்ற தகவல் உடல்களின் செயற்பாட்டின் விளைவுகளே எமது பூதவுடல்கள்.

துடிக்கும் களங்களைக் கொண்ட வெறுமையே(Void) எமது புற நிலை யதார்த்தம். இத்துடிப்புகள் நிறுத்தப்பட்டால் நாம் பரிபூரணமாவோம்.

பரிபூரணத்தில் எதிரும் புதிருமானவை ஒற்றுமையாகி ஒன்றிணைகின்றன. இந்நிலையில்தான் 'படைப்பது' செயற்படுகிறது. அது சட்ட திட்டங்களை வரைகிறது. இவை தான் பிரபஞ்சத்தின் சட்டதிட்டங்கள் ஆகின்றன. பிரக்ஞையின் பரிணாம வளர்ச்சியே'படைப்பதன்' குறிக்கோள். துவைதமான, எதிரிடையான நன்மை தீமை மூலம் பரிணாம வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. 'படைப்பவருடைய' சட்டத்திட்டங்களின் அறிவே நன்மை.ஆதியந்தமான அச்சட்டதிட்டங்களின் அறியாமையே தீமை. பரிணாம வளர்ச்சியை தூண்டும் இசைவுடையன நன்மையானவை. பரிணாம வளர்ச்சியின் வேகத்தை தடுப்பவை தீமையானவை.

Endocrine சுரப்பிகளை குறிப்பிட்ட,முன்னரே திட்டமிடப்பட்ட வழிகளில் இயங்க வைத்து மனித இனத்தின் ஒரு பகுதியினரை தேவைப்பட்ட விதத்தில் செயல்பட வைக்கும் நிகழ்வுத் தளங்கள் பிரபஞ்சத்தினுள் அடங்கும்.





பிரபஞ்சத்தின் கூர்ப்பு

ஒரு பிரக்ஞையின் அலகு, தான் 'படைப்பவரின்' ஒரு பகுதி என அறியும் பக்குவ நிலை அடைந்தால் படைப்பு அவ்வொருவரை பிறிம்பாக்கி அவரை சில வேலைகளை செய்ய நியமிக்கின்றது. படிப்படியாக அந்த பிரக்ஞை சம படைப்பாளி நிலையை அடைகின்றது.

பிரபஞ்சத்தின் உற்பத்தி, வெறுமையிலிருந்து ஒளிக்கீற்றினால் நீள்வட்டக் கோது ஒன்றைப் பிரிப்பதனால் ஆரம்பமாகிறது. முதற்பொருளில் துருவமடைதல் நிகழ்கிறது. இரு துருவங்களிடையே ஏற்படும் கலைவினால் அசைவு உண்டாகிறது.

மையத்திலுள்ள கருந்துளை,வெண் துளை கருவறையே அண்டத்திலுள்ள அனைத்துப் பொருட்களினதும் உறைவிடம்.

இந்தப் பிரபஞ்சம் வேறொரு பெரும் பொருளின் ஒரு சிறு கலமாகக்கூட இருக்கலாம்.



"இது,
கூடு திரும்பிகிற வரையில்
மரமேறி குதூகலிக்கலாம்.
பின்....?
இன்று,
நாடும் அப்படித்தான்"

மிதுஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மாவின் கவிதைகள்

## உறை நிலை உணர்வுகளின் மொழி

-ஏ. யதீந்திரா-

*அங்கு எனக்கென*
*ஓர் பிரபஞ்சம் உருவாகும்*
*அப்போது உயிர்பெறும்*
*எனக்கான வரிவடிவங்களுடன் கூடிய*
*என் மொழி*

**-ஆழியாள்.**

மொழி ஆள்பவர்களின் அரசியல், தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகும். நாம் பழக்கத்திலிருக்கும் சொற்களை அப்படியே ஏற்கமுடியாது. அச் சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பின்னே அவற்றை நாம் கையில் எடுக்க வேண்டும். என்ற கருத்து நிலையை ஒட்டிய ஆய்வு நோக்குகள் தமிழ் சூழலில் வெளிக்கிளம்பி விட்டன. அதன் நீட்சிதான் பெண்களுக்கான மொழிபற்றிய தேடலும். பொதுவாக எமது மொழியை நாம் பெண்ணை முதன்மைப்படுத்தி தாய்மொழியென பிரஸ்தாபித்துக் கொண்டாலும் நடப்பில் எமது மொழியென்னவோ ஆண் நோக்குநிலையிலான மொழியாகத்தான் இருக்கின்றது.ஆணாதிக்கத்திற்கு சேவகம் செய்யும் மொழியாகத்தான் இருக்கின்றது. ஆண்களின் மொழியே பெண்களுக்கான சமூக அறங்களைத் தீர்மானிக்கின்றது. இன்றும் பெண்கள் பாலியல் பற்றி பேசிவிட்டால் ஆண்கள் சகித்துக்கொள்ளமுடியாமல் ஆதங்கப்படுகின்றனர். ஏனெனில் இதுவரை பெண்களின் பாலியல் தேவைகள் பற்றி ஆண்களே பேசி வந்தனர். நிலைமை மாறி வருகிறது. பெண்கள் தமது எண்ணங்கள், தேவைகளை தமது மொழியில் பேசத் தலைப்பட்டுவிட்டனர். பேசியும் வருகின்றனர். அவ்வாறானதொரு பேசுகைதான் 'சல்மாவின்' கவிதைகள். தமிழ்நாட்டின் துவரங்குறிச்சி கிராமத்தை சேர்ந்த 'ராஜாத்தி பேகம்' என்ற இயற் பெயரையுடைய சல்மா சமகால நவீன தமிழ் கவிஞைகளுள் குறிப்பிடத்தக்கவர். இவருடைய 'மாலையும் இன்னொரு மாலையும்' என்ற கவிதைத் தொகுதியொன்று அண்மையில் வெளிவந்திருக்கிறது. (முதல் கவிதைத் தொகுதி). அவநம்பிக்கைகளின் வெளிப்பாடாக, பலவீனப்பட்டஒரு சீவனின் வெளிப்பாடாக ஒண்டிக் கொள்ள இடம் கேட்கும் ஓர் அந்தராத்மாவாக, என்னுடையகவிதைகள் வெளிப்பட்டமைக்கு என்னுடைய தனிமைதான் காரணம் என தனது கவிதைப் புனைவிற்கு காரணம் கூறுகிறார் சல்மா.




எமது சமூக அமைப்பில் பெண்கள் இன்றும் இரண்டாம்தர பிரஜைகள்தான். அவர்களது தேவைகள், அவர்களது விருப்பு வெறுப்பு பற்றிய அறிதலற்று வேறு எவராலோ தீர்மானிக்கப்படுகின்றது அவர்களின் உணர்வுகள் ஒரு பொருட்டாகவே மதிக்கப்படுவதில்லை. இந்நிலைமை குடும்ப நிலையிலிருந்து அந்தரங்க உறவுவரை நீண்டு செல்கிறது. இதனை சல்மா தனது வாழ்வியல் அனுபவத்தினூடாக மொழிகிறாள்.

*எப்பொழுதும்*
*எனது எல்லா காரியங்களும்*
*நான் இல்லாத போதே*
*நிகழ்ந்து விடுகின்றன.*

*ஒவ்வொரு முறையும்*
*எதையும்*
*ஸ்பரிசித்து உணர்வதற்குள்*
*அவை நிகழ்ந்து முடிகின்றன.*

*நான் முயன்றுதான் பார்க்கிறேன்*
*என்றாவது*
*எதுவாயினும்*
*நிகழ்வதற்கு முன்பே*
*நான் அதைத் தொடுவதற்கு.*

எமது சமூகத்தில் ஒரு பெண்,பெண்ணாக மட்டும் இருப்பதால் அனுபவிக்கும் அவஸ்தைகள் பல. அவைகள் எமது புரிதலுக்கு அப்பாற்பட்டதாகக் கூட இருக்கலாம். அது ஒரு கனவின் சிதைவாக இருக்கலாம். வாழ்தல் பற்றிய கேள்வியாக இருக்கலாம்.'புன்னகை' என்ற கவிதையில் சல்மாவின் திருமணத்தின் பின்னான அவஸ்தைகள் இவ்வாறு வரி வடிவம் கொண்டிருக்கின்றன.

*இனிவரும் புன்னகைகளெல்லாம்*
*வலிந்து பெறப்பட்டு*
*குறைபாடுகளுடன் இருக்கும்*
*அந்த புன்னகைகள்*
*யாருக்குமே உதவ முடியாது*
*எனக்கும் கூட*
*எனது பழைய புன்னகைகளை*
*அழும் குழந்தைகளுக்கும்*
*துயருறும் மனைவியருக்கும்*
*வெறுப்புமிகுந்த கணவர்களுக்கும்*
*தருவேன்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல்மாவின் பெரும்பாலான கவிதைகள் தனிமையின் அவஸ்தைகளையும், தாம்பத்திய உறவின் உணர்வுச் சிக்கல்களையுமே பேசியிருக்கின்றன. தனது அந்தரங்க உறவின் போதான பிறழ்வுகளையும் சல்மா கபடமற்ற மொழியில் பேச முயன்றிருக்கிறார்.

*குழந்தைகள் பெற்றதற்குப்பிந்தைய*
*இரவுகளில்*
*பழகிய நிர்வாணத்திற்கிடையில்*
*அதிருப்தியுற்றுத் தேடுகிறாய்*
*என் அழகின் களங்கமின்மையை*
*பெருத்த உடலும்*
*பிரசவ கோடுகள் நிரம்பிய வயிறும்*
*ரொம்பவும் தான் அருவெறுப்பூட்டு வதாய்ச்*
*சொல்கிறாய்.*

சல்மாவின் கவிதைகள் எல்லாமே மௌனம் கலைந்ததால் விளைந்த வரிகள். ஆனாலும் அனேக கவிதைகளில் தனிமையே பேசு பொருளாகியிருப்பதால் அது ஒரு வாசகனை சலிப்படையவும் செய்யலாம். படிமச் சுமையிலிருந்து விடுபட்டிருக்கும் சல்மாவிடம் மொழி இயல்பாகவே வசமாகியிருக்கிறது. மொத்தத்தில் மாலையும் இன்னொரு மாலையும் என்ற கவிதைத் தொகுதி எல்லோராலும் வாசிக்கப்பட வேண்டிய தொகுதி. பெண்கள் பற்றிய புதிய பார்வைகளுக்கு எந்தவகையிலும் இடம் கொடுக்க மறுக்கும் இஸ்லாமிய சமூகத்திலிருந்து வெளி வந்திருக்கும் ஒரு படைப்பாளி என்ற வகையில் சல்மாவின் கவிதைகள் ஒரு வாசகனை ஆச்சரியப்படுத்தலாம். தீவிர இஸ்லாமிய போக்காளர்களை ஆவேசப்படுத்தலாம்.



*வாழ்வின் எழுதப்படாத*
*ஒழுங்குகளைக்*
*காதோரத்தில்*
*கிசுகிசுத்துக் கொண்டேயிருக்கும்*
*அசரீரிகள்*

*இன்றைய உணவை*
*இக்காலத்தின் எனது உடைகளை*
*அவற்றின் வேலைப்பாடுகளை*
*இன்னும் என் உடலில்*
*மறைக்கப்படவேண்டிய*
*அவயங்களை.*

-சல்மா-

---

***சென்ற இதழில் இடம்பெற்ற யதீந்திராவின் கட்டுரைக்கான தலைப்பு தவறுதலாக அச்சிடப்பட்டுவிட்டது. அத் தலைப்பினை " தமிழ்த்தேச அரசியலில் பெண்கள்: சில குறிப்புகள்" என்று மாற்றிவைத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்***

***-பெயர்-***

# அழியாத அகதிகள்

*-நிலாபரன்-*
**சாம்பல்தீவு 03**

*சரித்திரத்தில் நான்*
*சாற்றப்படவில்லை....*
*ஆனால்*
*இந்த யுத்தகாண்டம்*
*சரித்திரமாக்கப்பட்டால்*
*அதில் நானுமோர்*
*சம்பவமாக்கப்படுவேன்.*
*ஈழம் இசைத்த*
*யுத்த கானத்தில்*
*நானுமோர்*
*வார்த்தையாக்கப்பட்டுவிட்டேன்*
*எனது பாதிப்புக்கள்*
*ஈழத்தில் ஓர்*
*புள்ளிபோன்றவை*
*ஆனால்....*
*என் வாழ்க்கையில்*
*அவை பூமிபோன்றவை.*

*வாழ்க்கை பயணத்தில்*
*கணவனைக் கைதவறினேன்*
*கரையேறும் கட்டத்தில்*
*என் மக்களை மாளவிட்டேன்.*

*விதவைக்கோலத்தில்*
*விடியல்களைத்தொலைத்துவிட்டேன்*
*அரைவயிற்றுக் கஞ்சிக்காய்*
*அகதியாய் பெயர் மாற்றப்பட்டேன்*

*இப்போது புதிதாய்ஓர்*
*உதய சூரியன்.*
*அது சமாதானமெனும்*
*ஒளிக்கீற்றுடன்.*

*காலதேவனின் விம்பங்கள்*
*கண்முன் வந்தாடுது.*
*செவிடாய்ப்போன பார்வைகள்*
*யுத்தத்தின் நிரந்தர செயலிழப்பை*
*செவிமடுக்கின்றது.*

*நாடுகடத்தப்பட்ட*
*வெண்புறாக்கள்*
*மன்னித்து வரவேற்கப்படுகின்றதா?*

*கொஞ்சம் பார்த்துக்கூறுங்கள்.*
*ஏனென்றால்*
*என் அகதிப்பட்டம் இன்னும்*
*அழிக்கப்படவில்லை.*

# பார்வையில் பட்டவை

**மூன்றாவது கண்** (உள்ளூர் அறிவுச் செயற்பாட்டு மடல்)
மடல்~01 ஆடி~2002
**ஆசிரியர் :சி.ஜெய்சங்கர்**
**தொடர்புகளுக்கு:**
30,பழைய வாடி வீட்டு வீதி,
மட்டக்களப்பு,
**அன்பளிப்பு : 20/=**

**ஞானம்** (கலை இலக்கிய சஞ்சிகை)
ஒகஸ்ட் 2002
**ஆசிரியர் :தி.ஞானசேகரன்**
**தொடர்புகளுக்கு:**
19/7,பேராதனை வீதி,
கண்டி
**விலை : 30/**

**சிறகுகள்** (வளரும் படைப்பாளிகளுக்கான மாத சஞ்சிகை)
ஆடி 2002
**தொடர்புகளுக்கு:**
514,மின்சார நிலைய வீதி,
திருக்கோணமலை
*(இதனால் கிடைக்கும் வருமானம் வறிய மாணவர்களின் கல்விக்காக பயன்படுத்தப்படும்.)*
**விலை : 22/=**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலையும் தொன்மைகள்

-கலகசபை தேவகடாட்சம்-
மல்லிகைத்தீவு.

வரலாற்றுக் காலங்களையும் கடந்த இதிகாச நாயகனான இராவணேஸ்வரன், இலங்காபுரியை தன் குடையின் கீழ் நல்லாட்சி புரிந்த இராசதானி தெட்சண கைலாயம் என்பதும் அக்காலங்களில் தான் சைவமும் தமிழும் பெருமை பெற்றுக் கொண்டது என்பதும் மறுக்க முடியாத உண்மைகளாகும். தெட்சண கைலாயம் எனும் திருக்கோணமலையிலே சிவ பக்தனாகிய இராவணேஸ்வரன் தன் அடையாளங்களைப் பதிப்பதற்காக சிவ ஆலயங்களை நிறுவியதுடன் ஒவ்வொரு காலடிக்கும் ஒவ்வொரு ஈஸ்வர சிலைகள் புதைக்கப்பட்டதாகவும் ஐதீகம் உண்டு.(ஆதாரம்:-பரமசிவன் எழுதிய 'வடக்கும் தெற்கும்')

அடுத்த படியாக இவ்விடத்தில் நினைவிற்கு வருவது சிவதொண்டன் குளக்கோட்ட மன்னனாவான். மீண்டும் ஈழத்தின் வரலாற்றுப் படிகத்தில் பாரதத்திலிருந்து வந்த குளக்கோட்ட மன்னனின் தடம் பதிக்கப்படுகிறது. திருக்கோணமலைச் சூழலில் குளக்கோட்டனின் திருப்பணி துளிர் விடத் தொடங்கியது. குடியேற்றம், அபிவிருத்தி, சிவஆலய புனரமைப்பு ஆகியன ஒருங்கே மிகுந்த திட்டங்களுடன் நடந்தேறியது. (ஆதாரங்கள்:-நா.பாலேஸ்வரியின் "கோவும் கோயிலும்", தங்கேஸ்வரியின் "குளக்கோட்ட தரிசனம்")

இவை ஒருபுறமிருக்க, இலங்கையிலே பௌத்தமதம், சிங்கள பெரும்பான்மை மக்களுக்கே உரியதென்பதும், அது சிங்களமக்களின் குறியீட்டு மதமாக பிரகடனப்படுத்தப் பட்டு பௌத்த நாடாக வெளிப்படுத்தப்படுவதும் விசித்திரமானது.

பௌத்த மதம் செழித்தோங்குவதில் எந்த மாறுபட்ட கருத்து வேறுபாடுகளும் உண்மையில் இல்லை. ஆனால், பௌத்த மதத்தினையும் போதி மாதவனையும் கருவியாகக் கொண்டு தமிழ் மக்களின் மூலங்களையும் சுதந்திரங்களையும் பறிக்க முனைவது தான் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.


காலங்களினால் கணக்கிட முடியாத பழமை வாய்ந்த கீர்த்தி மிகு திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வாயிலில் பெரியதொரு போதி மாதவனின் சிலையும், அதனுடன் சேர்ந்த துறவிகளின் பர்ணசாலையும்,

சூழவுமே சிங்கள மக்களின் அத்துமீறிய குடியேற்றங்களும் தற்கால இன நசுக்கலை காட்டுகிறது. (இது தற்போது கோகர்ண விகாரை என வழங்கி வருகிறது)

திருக்கோணமலையின் புற நகர்ப் பகுதியில்அமைந்திருக்கும் 'தம்பலகமம்' எனும் பகுதியில் பழமை மிகு ஆதிக் கோணேசர் ஆலயம் உள்ளது. அதனைச் சுற்றி அரசபடையினரின் காவலரண்களும் பாசறைகளும் உள்ளன. அவ்வடையாளங்களை ஸ்திரப்படுத்த அங்கே கௌதம புத்தரின் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

திருக்கோணமலை நகரிலிருந்து ஏறத்தாழ 20 கி.மீ தொலைவில் 'சேருவாவில்' (வில்-குளம் ) எனும் பகுதியில் பழம் பெரும் விநாயகர்ஆலயம் ஒன்று வழிபடப்பட்டு வந்திருக்கிறது. அதனை அடுத்தாற்போல் பெரும் தீர்த்தச்சுனை ஒன்றும் அமைந்திருக்கின்றது. தற்போது அதன் மூலங்களும் தொலைந்து 'சேருவில்' என பெயர் மாற்றம் பெற்று பௌத்த ஆலயம் அமைக்கப்பட்டு அதன் சார்பாக குடியேற்றங்களும் நடைபெற்று விட்டது.

இன்னும் சற்றுத் தொலைவில் 'நீலன்பளை' (நீலனுடைய பளை - பள்ளம்) எனும் இடத்தில் கண்ணகி வழிபாட்டுக் காலங்களில் கீர்த்திபெற்ற




கல்லைவெளி நாகரிகம் தோன்றிய இடம்

பட உதவி-புத்தூர் அகத்தியர்-க.பாலசுப்ரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





01-திருமங்களாய் கோயில் புராதனகாண்டாமணி (திருமங்களாய என்று பொறிக்கப்பட்டுள்ளது.)
02-கங்குவேலி கல்வெட்டு
03-அகத்திய ஸ்தாபன இடிபாடுகள்(திருக்கரசை)
படஉதவி-முத்தூர் அகத்தியர்-க.பாலசுப்ரமணியம்

'பத்தினியம்மன்'ஆலயம் உண்டு.(ஆதாரம்:பண்டிதர் இ.வடிவேலின் திருக்கோணமலை மாவட்ட திருத்தலங்கள்) காலப்போக்கில்நீலன்பளை 'நீலபொல'வாக மாற்றம் கண்டு அருகில் ஓர் பெரிய பௌத்த விகாரையும் பார்ணசாலையும் சிங்கள மக்களின் குடியேற்றமும் வெற்றிகரமாக நடந்துள்ளது.

மகாவலி கங்கையிலே அகத்தியர் நீராடி பலன் பெற்றஇடமாகிய 'அகஸ்தியர் ஸ்தாபனம்' எனும் இடம் திருக்கோணமலையில் 'கங்குவேலி' (கங்கைவேலி) எனும்கிராமத்திற்கு அண்மையில் உள்ளது. அப்பகுதியை 'திருமங்கை' எனும் அரசி ஆட்சி செலுத்தியமையால் 'திருமங்களாய்' என்ற பெயர் வழக்கிலிருந்தது. தற்போதைய அடையாள மாற்றங்களினால் பாதிக்கப்பட்டு 'ஸ்ரீமங்களபுர'என்ற பெயரில் குடியேற்றங்களும் நடைபெற்றுவிட்டது. அத்தோடு அருகிலிருந்த குளத்திற்கும் 'சுனித்திரா வெவ'என நாமம் சூட்டப்பட்டாயிற்று. (சுனித்திரா என்பவர் 1970ம் ஆண்டுகளில் பிரதம மந்திரியாகஇருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் புதல்வியும்,தற்போதைய ஜனாதிபதியின் மூத்தசகோதரியும் ஆவார்.)

இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளவை ஒரு சில தகவல்கள் மாத்திரமே.

திருக்கரசையில் - 09-08-2002



வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உங்கள் வியாபார நிறுவனத்திற்கான விளம்பரப் பலகைகளை கண்கவரும் வர்ணங்களில் வரைந்து கொள்ளுங்கள்.

- விளம்பரப் பலகை
- பிளாஸ்டிக் போர்ட்
- பதாதை
- வாகன இலக்கத்தகடு
- சினிமா ஸ்லைட்
- ஸ்டிக்கர் வேலைகள்
- கொம்பியூட்டர் பிரின்ட்
- ஸ்கிறீன் பிரின்டிங்
- கட்டடப் பெயின்டிங்

அனைத்து வேலைகளுக்கும் நாடுங்கள்

ஜீவன் ஆர்ட்ஸ்
26-ஈ, கடற்காட்சி வீதி,
திருக்கோணமலை.

**எமது எழுத்தாளர்களின் கவனத்திற்கு,**

எதிர் வரும் ஒக்டோபர் மாதம் வெளிவரவிருக்கும் எமது ஆண்டு இதழில், இதுவரை எமது சஞ்சிகையில் பல்வேறு ஆக்கங்களையும் எழுதிய அனைவரினதும் புகைப்படங்களை வெளியிட விரும்புகிறோம். எனவே தயவுசெய்து செப்டெம்பர் 15ம்திகதிக்கு முன்னதாக தங்கள் புகைப்படங்களை எம்மிடம் சேர்ப்பிக்குமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

ஆண்டு மலருக்கான ஆக்கங்கள் அனைவரிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன. —பெயர்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமையுடன்...

அன்புள்ள தோழனுக்கு,

உன் கடிதம் கண்டேன். எனது கருத்தினையும் உன்னோடு பரிமாற ஆசைப்படுகிறேன். இன்றைய கால கட்டத்திலே சகஜமாக பழக வேண்டிய நாம் சந்தேகப் பார்வைக்கு மத்தியில் பயந்து பயந்து பழகுகின்றோம். இது ஏன்? ஏன் எமது சமூகம் இதனைத் தவறான கண்ணோட்டத்துடன் நோக்குகிறது? ஆணும் பெண்ணும் ஒன்றாக சேர்ந்து செய்ய வேண்டிய எத்தனையோ கருமங்கள் உண்டு. அவற்றையெல்லாம் செய்ய முடியாதபடி கலாசாரம், மதம் என்ற வேலிக்குள் ஏன் எம்மைப் போட்டு அடைக்கின்றனர்? சாதி, மதம், கலாச்சாரம் இவை எப்போது நீங்குமோ அப்போதுதான் எம் சமூகம் முன்னேறும். இது நிச்சயம்.

எதற்காக இந்த சமூகத்தினர் எமது இளைய சமுதாயத்தை அடக்கி ஆள முற்படுகின்றனர்? வழிகாட்டல் தேவைதான் எனினும் அடக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம்?

எமக்கென ஒரு சுதந்திரம் உள்ளதா? அப்படி சுதந்திரமாக வாழ நினைத்தால் 'கெட்டவர்' என்று பட்டம் சூட்டுகின்றனர். எங்கு பார்த்தாலும் காதல், காதல், கலியாணம் இதுதான் வாழ்க்கையா? இதைத்தவிர சாதிக்க வேறெதுவும் இல்லையா? இவை வாழ்க்கையின் ஒரு பகுதி. அதற்காக அவைதான் வாழ்க்கை என்று ஆகிவிட முடியுமா? திருமணம் எனும் சிறைக்குள் பெண்களை, பெற்றவர்கள் தள்ளுகின்றனர். அப்படி திருமண பந்தத்தில் இணைந்தவர்கள் எதைத்தான்சாதித்து முடித்தார்களோ தெரியவில்லை. மேலைத்தேய நாடுகள் இன்று முன்னேறியிருப்பதன் காரணம் இன்னும் ஏன் எம்மவருக்கு புரியவில்லை? எதையும் சாதாரணமாக எடுக்கப்பழக வேண்டும். ஆனால் தொட்டதற்கெல்லாம் குறை கண்டுபிடிப்பவர்களிடையே இதை நாம் எங்கே எதிர்பார்ப்பது?

அதற்காக முற்றுமுழுதாக எம் கலாச்சாரத்தை விட்டு மாற வேண்டியதில்லை. நல்லவற்றை மாத்திரம் எடுத்துக் கொண்டு எம் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கலாம்தானே?

இன்று வீதியில் ஓர் ஆண், பெண் கண்டு புன்னகைக்க கூடமுடியாது. பயந்து பயந்து தான் புன்னகைக்க முடியும். அதைக் கூட ஆயிரம் கண்கள் உற்று நோக்கும். இப்படியிருக்கும் போது நாம் எம்மைப் பெற்றவர்களைக் குறை கூறவில்லை. ஏனெனில் எல்லாப் பெற்றோரும் தம் பிள்ளை நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள் இவ்வாறு பெற்றோரைப் பற்றி நாம் சிந்திக்கும் அளவிற்கு அவர்களும் எம்மைப் பற்றி சிந்திக்கவேண்டும். அதுதான் என்னுடைய வாதம். அப்படி நடக்கும் பெற்றோர்கள் எத்தனை பேர்?

பெண்ணுக்கும் ஆணுக்கும் சுயமான சிந்தனைத் திறன் உண்டு. அதன்படி நடப்பவரே உண்மையான மனிதர். நாமெல்லாம் ஒன்றாகப் பழகும் சூழல் என்றுதான் உருவாகுமோ தெரியவில்லை. இம்மடலுக்கு உன் பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவள்,

- உன் தோழி -

(இக்கடிதத்தை எழுதியனுப்பிய வாசகி, தன் பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்)

---

*அன்பின் தோழிக்கு,*

*உன்கடிதம் கிடைத்தது. முக்கியமான விடயம் ஒன்றினைப் பற்றி உன்னோடு விவாதிக்க வேண்டியிருப்பதால் உன் கடிதத்திற்கான பதிலை அடுத்த முறை எழுதுகிறேன்.*

*அண்மையில் தமிழக அரசியல்வாதி வை.கோபாலசாமி என்பவரை சிறையிலடைத்தமையைக் கண்டித்து இங்கு ஓர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். நானும் போயிருந்தேன். அங்கே ஜெயலலிதாவை கண்டிப்பதாக நினைத்துக் கொண்டு செய்யப்பட்டசில வெளிப்பாடுகளின் போது விரும்பத்தகாத ஆணாதிக்கப் போக்கினை வெளிப்படுத்தியமை கவலையைத் தந்தது.*

*அங்கே மட்டுமல்ல, அண்மையில் நிகழ்ந்த இத்தகைய போராட்டங்களில் எல்லாம் இப்படித்தான் நடந்து கொண்டார்கள்.*

*'ஆட்டக்காரி' 'கூத்துக்காரி' போன்ற வாசகங்கள் கண்டிக்கத்தக்க கீழ்த்தரமான செயல். இவற்றில் இன உணர்வோ, தன்மான உணர்வோ எதுவுமில்லை. முழுக்க முழுக்க ஆணாதிக்கம். ஜெயலலிதாவின் அரசியலை விமர்சிப்பதில் எனக்கு எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் ஒரு பெண் என்பதற்காக அவரை கேவலப்படுத்துவது நாகரீகமற்ற செயல். நடிகையைப் பாலியல் தொழிலாளியாகப் பார்க்கும் பிற்போக்குச் சமூகம் நம்முடையது. அதன் வெளிப்பாடுதான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட வாசகங்கள்.
போராட்டங்கள் முற்போக்கானவையாக இருக்க வேண்டும். பெண்களைக் கேவலப்படுத்தும் ஆணாதிக்கத்தின் வடிகால்களாக ஆகிவிடக்கூடாது.
தற்போது அடிக்கடி பகிஷ்கரிப்புகளும், ஹர்த்தால்களும் தொடர்ச்சியாக நடந்த வண்ணமுள்ளன. இவையெல்லாம் உணர்ச்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்துகிறதோ என்னவோ இகழ்ச்சிக்குரியதாய் மாறி விடுமோ என்று பயமாக இருக்கிறது.

போராட்டம் என்ன பண்டிகையா? ஹர்த்தால் என்ன களியாட்ட நிகழ்வா?

ஹர்த்தால் என்றால் பார்க்க வேண்டும் நம் மக்களின் மலர்ச்சியை, மாணவர் கூட்டத்தின் மகிழ்ச்சியை. ஊர்குழம்பினால் எல்லோருக்கும் கொண்டாட்டம் தான். ஊரைக்குழப்பி, பாடசாலைகள், வேலைத்தளங்கள். எல்லா வற்றையும் குழப்பி, மக்களுக்கு மகிழ்ச்சிகரமான விடுமுறை வழங்கி நடத்தப்படும். இவ்வாறான போராட்டங்கள் வெளியுலகிற்கு 'வீடியோ' காட்ட வேண்டுமானால் பிரயோசனமாக இருக்கலாம்.

மக்கள் மனதில் போராட்டத்தின் தீவிரத்தை மழுங்கடித்து, எழுச்சி என்ற சொல்லையே கேலிக்குள்ளாக்கி, மக்கள் உணர்ச்சிகளின் வீரியத்தை இல்லாமல் செய்து விடுகின்ற இத்தகைய. போராட்டங்கள், விடுதலைக்கு போராடும் இனமான எமக்கு நன்மை தரப்போவதில்லை.

கூட்டம் சேர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் உத்தி தான் வேதனையைத் தருகிறது.

பாடசாலை என்பது ஒரு நிறுவனம். அங்குள்ள மாணவர்கள் ஏற்கனவே நிறுவனமயப்படுத்தப்பட்டவர்கள் அவர்களை அதிபரின் அனுமதியுடன் பொருட்களைப் போல தூக்கிக் கொண்டு வந்து வேண்டிய இடத்தில் வைப்பதும் பின்னர் அகற்றுவதும் சுலபம்.

கஷ்டப்படாமல் கூட்டம் சேர்ப்பதற்காகவும், வெளியுலகிற்கு காட்டுவதற்காகவும் மாணவர்களைப் பயன்
படுத்துவது மிகவும் கீழ்த்தரமான செயல்.

மாணவரின் உணர்வுகளை மதிக்கப்பழக வேண்டும். அவர்கள் தாம் விரும்பி எழுச்சி கொண்டு கூடிப் போராடுவது வேறு, வலிந்து அழைத்துச் செல்லப்பட்டு வெயிலில் வாட்டப்படுவது வேறு.

இச்செயல், முணுமுணுப்புக்களை மட்டுமல்ல, போராட்டங்களுக்கு எதிரான உணர்வுகளையும் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி விடும்.

முதலில் நடத்தப்படும் போராட்டம் என்ன என்ற தெளிவு வேண்டும்.

அதன் பின்னர் போராட்டத்தின் நோக்கம் பற்றியும் அதன் தார்மீக தேவைபற்றியும் மக்களுக்கு போதுமான அளவு அறிவூட்ட வேண்டும்.
,இவ்வாறாகப் போராடும் போது மக்களிடையே விழிப்புணர்வும், தானாகவே ஒரு எழுச்சியும் ஏற்படும்.

இப்படியாக கருத்து தெளிவு பெற்ற மக்கள் ஒரு போதும் போராட்டம் என்ற பெயரில் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள்.

உண்மையான மக்கள் போராட்டம் என்பது தானாக வெடிக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பு. எனினும் கேவலமான போராட்டங்களை விட நான் சொன்னது அர்த்தமுள்ளதாக இருக்கும். இது பற்றி உன்னுடைய கருத்துக்களையும் எழுது.
மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்
தோழன்.

**இந்தக்கடிதத்திற்கான பதில்களை வாசகர்களிடமிருந்து தோழன் எதிர்பார்க்கின்றார். எதிரான கருத்துக்களையும் எழுதலாம். தரமான பதில் கடிதம் ஒன்று பிரசுரமாகும். இம்முறை வெளியான கடிதத்தை எழுதி அனுப்பியவருக்கு வேளை இன் ஓராண்டுச்சந்தா இலவசமாக வழங்கப்படுகின்றது.**

**தபாற்செலவுகள் அதிகரித்து இருக்கும் காரணத்தால் பெயர் இதழின் சந்தாக்கட்டணம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. புதிய சந்தா விபரம் வருமாறு:**

**6 இதழ்கள் 150/=**
**12 இதழ்கள் 300/=**


**(ஏற்கனவே சந்தாதாரர்களாக இணைந்தவர்களுக்கு தொடர்ந்தும் வழமை போல பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாந்தனின் – "எழுதப்பட்ட அத்தியாயங்கள்" சிறுகதைத் தொகுதி பற்றி...

– நந்தினி சேவியர் –



மல்லிகைப்பந்தல் வெளியீடாக 2001 மேயில் வெளியிடப்பட்ட இக்கதைத் தொகுதி சாந்தனின் "தென்னிலங்கை வாசகர்களைச் சென்றடையச் சாத்தியப்பட்டிராத என் ஆக்கங்களுக்கு இத் தொகுதியில் முன்னுரிமை கொடுக்க நேரிடுகிறது....... "எனும் ஒரு வரிக் குறிப்புடனும்(மேலும் சில வரிகள் இருக்கின்றன) கலாநிதி நா.சுப்பிரமணியம் அவர்களின் முன்னுரையுடனும் டொமினிக் ஜீவாவின் பதிப்புரையுடனும் வெளிவந்துள்ளது.

சாந்தன் 70 களில் எழுதத் தொடங்கியவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். தன்னை ஒரு இடதுசாரியாக அவர் எப்போதும் காட்டி வந்தவர். இவரது 'அந்நியமான உண்மைகள்'சிறுகதை முற்போக்காளர் மத்தியில் பலத்த விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டமை ஒரு சுவாரஸ்யமான விடயமாகும்.

இன்று முற்போக்காக எழுதும் படைப்பாளிகள் மீது வைக்கப்படும் "தமிழ்த் தேசிய வாதிகளாக மாறிவிட்டோா" எனப்படும் குற்றச்சாட்டுக்கு முதல் இலக்கானவர் சாந்தனே. அவரது இத் தொகுதியால் சிறுகதைகள், குறுங்கதைகள், குறுநாவல்கள் எனத்தக்க 12 படைப்புகள் அடங்கியிருக்கின்றன.

சாந்தனிடம் வார்த்தைகளுக்கு அலையும் எந்தவித அந்தரமும் இல்லை.

தனது கண்ணுக்குத் தெரியும் காட்சிப் படிமங்களை எழுத்தில் அநாயாசமாக கொண்டுவரும் லாவகம் அவருக்குக் கைவந்தது.

கொழும்பு நகர வாழ்க்கையாகட்டும், காரியாலயத்து நிகழ்வுகளாகட்டும், யாழ்ப்பாண வாழ்வனுபவமாகட்டும் எல்லாவற்றையும் கைதேர்ந்த ஒரு தொழில் நுட்பக் கலையார்வத்துடன் இவர் தரமுயல்கிறார்.

சாந்தனது மொழிநடை பிற தமிழ் எழுத்தாளர்களது எழுத்து நடையை விட வித்தியாசமானதும், தலைமைத்துவமானதுமாகும்.

சிறுகதை, குறுநாவல், நாவல் எனும் வகை மாதிரிகளுக்கு உதாரணம் காட்டும் எந்த ஒரு அடையாளத்தையும் இவரது படைப்புகளில் காணக்கிடைப்பதில்லை. இதுவே சாந்தனின் எழுத்து வன்மையாகும்.

இவரது நெடுங்கதை அல்லது குறுநாவல் எனச்சொல்லத்தக்க 'கிருஸ்ணன் தூது' கொழும்பு காரியாலயத்திலுள்ள இன ஒதுக்கல் நிலைப்பாட்டை கூறுவதாகும். கொழும்பு வாழ் யாழ்ப்பாணத்து மனிதர்களின் அசிங்கமான மனோபாவங்களைக் கூற விளைவது ' ஆரைகள்' கதையாகும். இதே போல் தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் கூறும் 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்.' கதையில் சுதுமலைப் பிரதேசத்து மனிதர்களின் அகவய உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அமைதி காக்கும் படையாக வந்தவர்களின் செயற்பாடுகளின் ஒரு அனுபவத்தைக் கூறும் 'வேலிகளின் கதை' யாழ்ப்பாணத்து மக்கள் மட்டுமே அனுபவித்த ஒன்றாகும்.

ஒரு யாழ்ப்பாணத்துக் கிராமப்புறத்து இளைஞன் தனது மேற்படிப்புக்காக கொழும்பு சென்று படித்து உத்தியோகம் பெற்று குடும்பமாகி அங்கு வாழ்ந்து ...... மாற்றலாகி யாழ்ப்பாணம் வந்து நேற்றுவரை பெற்ற அனுபவங்களின் சிறு பகுதியே எழுதப்பட்ட அத்தியாயங்களாகும்.

சாந்தனிடம் உள்ள பலமும் பலகீனமும் தான் அனுபவங்களை படைப்பாக்குதலாகும். இதில் இருந்து இவர் விடுபடுதல், லேசானதாகத் தெரியவில்லை.

இவரது 'முனைகள்' சிறுகதையிலிருந்து இத்தொகுப்பிலுள்ள இறுதிக்கதையான 'சனம்' வரை சாந்தன் மட்டுமே (கிருஸ்ணன்) வெளித்தெரிகிறார். இது தற்செயலானது அல்ல.

இன்னதுதான் எழுதவேண்டும் என ஒரு படைப்பாளியை நிர்ப்பந்திக்க யாருக்குமே அதிகாரமளிக்கப்படவில்லை. ஆனால் ஒரு சிறுகதைத் தொகுதியை நாவலாக செய்துவிடும் விபத்து, படைப்பாளிகள் பலருக்கு நேர்ந்து வருவது போல சாந்தனுக்கும் நேர்ந்திருக்கிறது.

எழுதப்பட்ட அத்தியாயங்கள் முழுமையாகப் பார்த்தால் ஒரு சிறு கதைத் தொகுதி என்பதை விட நாவல் என்பது பொருத்தமாகப்படலாம். ஒரு கதைக்கும் இன்னொரு கதைக்குமிடையில் ஒத்திசைவு, ஒற்றுமை, ஒரு தொடர்ச்சி நிகழ்கிறது. .இவ்வடிப்படையில் இன்னும் இன்னும் சிலர் எழுதுவதற்கு பல அத்தியாயங்கள் இருப்பதாகப் படுகின்றது.

வாழ்வியல் அனுபவங்களில் கலந்து நின்று உண்மையையும் முழுமையையும் தேடும் ஒரு மனித நேய வாதியாக , படைப்பாளியாக இவர் இருப்பதற்கு இவரது வாழ்வு பல்லினச் சூழல் சார்ந்ததாக ஆரம்பத்தில் அமைந்தது ஒரு காரணமாக இருக்கலாம்.

இவரது வார்த்தைகள் போலவே இவரும் உண்மையாக இருப்பதனால் தான் ஓர் இனம் சார்ந்த தன்மையை இவரால் பேண முடியாதுள்ளது. பொது மனிதனாகவே இவரால் வாழ்வை படைப்புகள் மூலம் விமர்சிக்க முடிகிறது.

இத்தொகுப்பில் 'அந்நியமான உண்மைகள்' சிறுகதை சேர்க்கப்பட்டிருந்தால் இத்தொகுதிக்கு மேலும் ஒரு நிறைவு ஏற்பட்டிருக்கும், சமகால நிகழ்வுகளுடன் அப்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்க புதிய தலைமுறைக்கு ஒரு சந்தர்ப்பமும் கிட்டியிருக்கும்.

சாந்தனின் முழுக்கதைகளும் ஒரு தொகுப்பாக வெளிவருவது இன்றைய காலகட்டத்தில் விருப்புக்குரிய தேவையாகும். சாந்தனுக்கு இது ஒன்றும் பெரிய காரியமல்ல.

---

**இவ்விதழின் பின்னட்டையில் (20ம்பக்கம்) உள்ள கவிதையை புனைந்தவர் *கௌசி.***
**அதில் இடம்பெற்றிருக்கும் புகைப்படத்திலுள்ள சிற்பத்தைச்செதுக்கியவர் *A.V.ஆனந்தன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல விதமான கட்டடப்பொருட்களுக்கும்

**NEW GOPALAN COMPANY**

78 Seaview Road,

Trincomalee.

026-22619

026-22405

**உப்புவெளி மெடி கிளினிக்**

மருத்துவத்திற்கும் மருந்திற்கும்

உப்புவெளி மெடி கிளினிக் ,
உப்புவெளிச்சந்தி,
திருக்கோணமலை.

பெயர் மீது நீங்கள் செய்யும் விமர்சனங்கள் அனைத்தும் வெறும் பேச்சாக மட்டும் இருக்க வேண்டாம்.எழுத்து மூலமாக செய்யப்பட்டால் மாத்திரமே கவனத்தில் கொள்ளப்படும்.

விமர்சனங்கள் வந்தேயாக வேண்டும்!
விவாதங்கள் நடந்தே தீர வேண்டும்!

**Trinco Stationers**

Dealers in Computer, Accessories, Peripherals, Stationers,
Government Suppliers Silver and Fancy Goods Etc.

HEWLETT PACKARD TOSHIBA Canon 3M verbatim

AVALON EPSON

31,3rd cross Street,
Trincomalee.

Tel / Fax 026-23071
Res 026-20165

e-mail : tristationers@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்பேன்?

அன்றைய ஒருநாள்,
எப்படியெல்லாம்
மறக்க நினைத்தாலும்
என்னுள்
மரத்துப்போன ஒருநாள்.

அழகிய..
இனிய..
பசுமையான..
அந்த நாளை
அவ்வளவு இலகுவில்
சொல்லிவைக்கமுடியாது.

அதுவொரு விசித்திரமான நாள்
ஒவ்வொருவர் மேனியிலும்
எத்தனை விளையாட்டுக்கள்
அரங்கேறும் - அதுவே
பின் வினையாகும்.
அதுவொரு வித்தியாசமான நாள்.

என் உணர்வுகளை
உனக்குச்சொல்லியாக வேண்டும்
அதற்கு,
நாங்கள் கதைத்தாக வேண்டும்.
என்னை புரியச்செய்யவும்
உன்னை புரிந்து கொள்ளவும்
நாங்கள் கதைத்தேயாக வேண்டும்.
மாலை மங்கிக்கொண்டிருந்தது.
விடியலுக்காக விழித்திருந்தேன்.
காலைப்பொழுதில் காத்திருந்தேன்.
கணப்பொழுதில்,
என் உணர்வுகளை
பாசம் பறித்துப்போனது.

என் செய்வேன்?

நான் முட்டாளாகி
உன்னை முட்டாளாக்கி - பின்
மௌனியானேன் - அந்த
ஏப்பிரல் ஒன்றை
எப்படி மறப்பேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org